ஒரு தனிக் கேள்வி தேவையில்லை என்று நினைக்கிறேன். எனவே அதற்கான பதிலை மாண்புமிகு அமைச்சரவர்கள் வழங்குவார்களா என்பதை தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் தமிழகத்திலே விளைந்து பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய அளவிற்கு உள்ள தோட்டக்கலைப் பயிர்களான காய்கறிகள், பழங்கள் இவற்றை ஏற்றுமதி செய்வதற்கும், அந்தப் பழங்களைப் பதப்படுத்துவதற்குரிய தொழில் நிறுவனங்களை அமைக்கவேண்டும் என்று இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். எனவே மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கு வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கை வருகின்றபோது அது பற்றிய அனைத்து விவரங்களும் அளிக்கப்படும் என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 71, திரு. சி. இராமசுவாமி, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

71—

கல்வராயன் மலையருகில் கிராபைட் தொழிற்சாலை அமைத்தல்

***15241**—திரு. சி. இராமசுவாமி:*

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் கல்வராயன் மலையருகில் கிராபைட் தொழிற்சாலை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தென்னாற்காடு மாவட்டம், கல்வராயன் மலைப் பகுதியில் கிராபைட் படிவங்கள் இல்லை. எனவே, அப்பகுதியில் கிராபைட் தொழிற்சாலை அமைக்க வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10.45

திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வராயன் மலைப் பகுதியில் கிராபைட் தொழிற்சாலை அமைக்க அனைத்து சாத்திய கூறுகளும் உள்ளன. மலை வாழ் மக்கள் நலன் கருதியும், படித்த இளைஞர்களில் வேலைவாய்ப்பு நலன் கருதியும் மேற்படி தொழிற்சாலையை அங்கே துவங்க அரசு மறு பரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

1994 மார்ச் 22]

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வராயன் மலைப் பகுதியில் கிராபைட் படிவங்கள் இல்லை என்று நான் பதிலிலேயே சொல்லிவிட்டேன். தமிழ்நாட்டில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம், சிவகங்கை மற்றும் மதுரை மாவட்டம், திருமங்கலம் ஆகிய பகுதிகளில் லாபகரமாக வெட்டி எடுக்கக் கூடிய அளவில் கிராபைட் படிவங்கள் இருக்கின்றன. இப்பகுதியில் கிடைக்கும் செதில் வடிவமான கிராபைட் பல தொழில்வளர்ச்சி பொருட்கள் தயாரிக்க பயன்படுகிறது. ஆதலால் தமிழ்நாடு கனிம நிறுவனம் அந்தப் பகுதியை குத்தகைக்கு எடுத்து கிராபைட் படிவங்களை வெட்டிஎடுத்து வருகிறது. அந்த கிராபைட் படிவங்களை மேம்படுத்த சிவகங்கையில் ஒரு தொழிற்சாலை நிறுவப்பட்டு வரும் ஏப்ரல் முதல் வாரத்தில் உற்பத்தியைத் தொடங்கும். கல்வராயன் மலைப் பகுதியைப் பொறுத்தவரையில் கிராபைட் படிவங்கள் இல்லை. ஆகவே அங்கே தொழிற்சாலை அமைப்பதற்கு வாய்ப்பு இல்லை என்பதை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 72 டாக்டர் மு. சீனியம்மாள், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

72—

அவிநாசி தொகுதி, தெலுங்குப்பாளையம் பள்ளிக்கு சத்துணவுக்கூடம் அமைத்தல்

****21537—டாக்டர் மு. சீனியம்மாள்:***

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) அவிநாசி தொகுதி, தெலுங்குப்பாளையம் பள்ளிக்கு ஒரு சத்துணவுக்கூடம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): இந்த வினா 27-5-1993-ல் கேட்கப்பட்டது. மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய உத்தரவின் பேரில் உடனடியாக நடவடிக்கை எடுத்து ரூபாய் 25 ஆயிரம் மதிப்பீட்டில் சமையல் கூடம் மற்றும் பொருள்கள் வைக்கும் அறை கட்டி முடிக்கப்பட்டு, பணிகள் முடிந்து விட்டன என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் மு. சீனியம்மாள்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் செய்து முடிக்கப்பட்டு விட்டதாக கூறினார்கள். இன்றைக்கு ஏட்டிக்குப் போட்டியாக எத்தனையோ ஈட்டிகளை எங்கள் முதல்வர் அவர்களின் இதயத்தில் பாய்ச்சிட